விலை ரூபா 6.00

# ஈழநாடு வாரமலர்

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 25 இதழ் 218
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 10 – 9 – 1995

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

மட்டக்களப்பில்

## குண்டுவெடித்து அதிகாரி உட்பட இரு இராணுவம் காயம்

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில், வெடிகுண்டு ஒன்றை அகற்ற முற்பட்டபோது இராணுவ அதிகாரி உட்பட இரு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாக பாதுகாப்புஅமைச்சு அறிவித்தது.

மட்டக்களப்புக்கு வட-மேற்கே 12 கிலோமீட்டர் தூரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு ஒன்றினை நேற்றுப்பகல் 11-மணியளவில் இராணுவத்தினர் அகற்றமுற்பட்டபோதே இருவரும் காயமடைந்ததாகபாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

-வி-ரி

## படையினருக்கு ஆதரவாக பிக்குமார் வடபகுதி போர்முனைகளுக்கு விஜயம்

(கொழும்பு)

வடபகுதி படைமுகாம்களுக்கு பிக்குமார்களின் குழுவொன்று அண்மையில் விஜயம் செய்து படையினருக்கு உற்சாக மூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

பலாலி. காங்கேசன்துறை மாதகல் மற்றும் பல முகாம்களில் படையினரைச் சந்தித்து அவர்களின் சேமநலன்கள் பற்றி விசாரித்தார்கள்.

இந்தச் சுற்றுப் பயணத்தில் 7 பிக்குமார் கலந்து கொண்டனர் நேற்று முன்தினம் போயா தினத்தை யொட்டி காங்கேசன்துறை நடேஸ்வரா வித்தியாலயத்திலும் பலாலி ராணுவ முகாமிலும் விசேஷ சமய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பலாலியில் போதிபூஜை இடம் பெற்றது.

வடபகுதிக்கு பொறுப்பான ராணுவதளபதி மேஜர் ஜென

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழர் ஏற்கும் தீர்வு எதையும் சந்திரிகா முன்வைக்கவில்லை

### - லண்டனில் கண்டனம் -

(லண்டன்)

இலங்கை அரசு தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வை முன்வைக்காததைக் கண்டித்து லண்டனிலுள்ள தமிழர்கள் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

'தமிழர் ஈழம் அமைப்பு' நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில் 5000க்கு மேற்பட்ட தமிழர்கள் பங்கு பற்றினார்கள்.

ஈழத்தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை முன்வைத்து தமிழர் பிரச்னையைத் தீர்க்கவேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களினால் வலி...

(8ம் பக்கம் பார்க்க)

## சவாரித்தம்பர்



சவாரித்தம்பர் : இப்ப கல்யாண சீசன்.. வீடுகளுக்குப் போனால் பாக்கு வெற்றிலை வைச்சு உபசரிக்கிற பழக்கம் போச்சு

சின்னக்குட்டி : அப்ப.........!

சவாரித்தம்பர் : இப்ப ஒரு போட்டோ அல்பத்தை யெல்லோ கொண்டு வந்து எல்லாரும் வைக்கினம்.

— சிரித்திரன் சுந்தர்.

### மர்மச் சடலங்களுடன் தொடர்பு:

# 11 அதிரடிப்படை பொலிஸ் அதிகாரிகள் பதவி நீக்கம்

(கொழும்பு)

தென்பகுதியில் ஆறுகளிலும், வாவிகளிலும் அண்மையில் மீட்கப்பட்ட மர்மச்சடலங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற காரணத்தினால் பதினொரு அதிரடிப்படை பொலிஸ் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.


இவ்வருடம் மே மாதத்தின் பின்பு தெற்கில் ஆறுகளிலும், வாவிகளிலும் மர்மமான முறையில் சடலங்கள் மிதந்து வந்தது கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து இது தொடர்பான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் பொலிசார் ஈடுபட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து

(8ம் பக்கம் பார்க்க)

## ஆத்மஜோதி முத்தையா கனடாவில் காலமானார்

(யாழ்ப்பாணம்)



சைவப் பெரியாரும், இந்து சமயப் பேரவைத் தலைவருமான ஆத்மஜோதி நா. முத்தையா (77-வயது) கனடாவில் மாரடைப்பினால் காலமாகி விட்டார்.

அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழுக்கும், சைவத்துக்கும். கல்விக்கும் அளப்பரிய பணியாற்றிய இவர் தனது இறுதி மூச்சு வரை இப்பணியிலே ஈடுபட்டிருந்தார்.

அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும்

(8-ம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதமாக செயற்படும் பொலிஸ்மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

"பொலிசார் அரசாங்கத்தின் சார்பில் அரசியலில் ஈடுபடக்கூடாது. சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிசாருக்கும் ஆயுதப் படையினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஒருபோதும் தயங்காது."

இவ்வாறு ஜனாதிபதி திருமதி சந்திரிகா நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பொலிஸ் அதி

(8ம் பக்கம் பார்க்க)

உ

சிவமயம்

★ விற்பனைக்கு ★

°° யாழ். ஆஸ்பத்திரி வீதி °° கஸ்தூரியார் வீதி, °° ஸ்ரான்லி வீதிகளில் கடைகளும், °° கடைகள் கட்டக்கூடிய நிலங்களும், மற்றும் ஃ யாழ். நாவலர் வீதி, °° பிறவுண் வீதி, °° பலாலி வீதி நல்லூர் [கோவில் வீதி]களில் சகல வசதிகளுடன் கூடிய வீடுகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : கனகசபை தர்மகுலசிங்கம்

"விற்பனை முகவர்"
சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம்.

"பழமுதிர்சோலை"
காரைநகர்.

(ஏ-5252)

## வரி விளம்பரம்

### புதிய நீமியா உரம்

புதிய நீமியா உரத்தை அடிக்கட்டுப் பசளையாகப் பாவித்துப் பெருவிளைச்சல் பெறுங்கள் ஒட்டுண்ணிகளை ஒட்டவிடாமலும் காக்கிறது. செலவும் கம்மி. ''மில்க் வைற்'' (எ-5272)

### கணிதம் – 95

O/L மீட்டல் இதுவரையும் பெறு பேறடையாதவர்கட்கு திரிகோண கணிதம், மடக்கை வரைபு, தேற்றங்கள் பங்கு முதலியன B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும் 85, திருநெல்வேலி சிவன்கோவில் மேற்கு வீதி. (சி-1646)

### ஓவியப்போட்டி

நவராத்திரி விழாவை முன்னிட்டு தமிழ் மா மன்றத்தால் நடாத்தப்படும் ஓவியப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் 95 - 9 - 15ம் திகதிக்குமுன் தமிழ் மா மன்றம், இருபாலை என்ற முகவரிக்கு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். (வயதுக் கட்டுப்பாடு இல்லை) (சி-1653)

### பிரம்புப் பின்னல்

பிரம்பிலான சகல பின்னல் வேலைகளும் செய்து கொடுக்கப்படும். ராஜன் பின்னலகம், 286, அருச்சுனா வீதி ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். (எ-5271)

### ரி. வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T. V., Radio அவற்றின் I C, அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனா, பூஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள், பலவித கல்குலேற்றர், பற்றறிகள், வீடியோ, ஓடியோ கசற் வகைகளையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்; அன்ரனா பொருத்திக் கொடுக்கப்படும்; புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்) 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5245)

### புதிய நீமியா உரம்

நெற்பயிருக்குச் சிறந்த அடிப்பசளை, மண்ணுக்கு வளமூட்டி, நீரில் ஊட்டச்சத்து கரையாது காத்து விளைச்சலைப் பெருக்கிறது; பாவித்தோர் மீண்டும் நாடிவருகிறார்கள். போற்றிப் புகழ்கிறார்கள்; அன்னா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. ''மில்க்வைற்'' (எ-5267)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா, மூட்டுவாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார் வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1594)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

# யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்

## வரைவுள்ளது

# பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன; தகுதியான விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்களை பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ 23-09-95ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றுநிருப இல. 108/81இன் பிரகாரம் இவ்விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

**பதவி:** கிளை முகாமையாளர் (தற்காலிகம்)

இல. 208 - 11

805 — 1260

சம்பள அளவுத் திட்டம் ......................... 25 X 7 — 35 X8

கூட்டுறவுப் பணியாளர்களுக்குரிய இதர படிகளும் வழங்கப்படும்.

**கல்வித் தகைமை:**

கூட்டுறவுப் பணியாளர் சம்பள அளவுத் திட்டத்தில் 12-வது சம்பளத்திட்டத்தில் 2 வருட கால அனுபவம்

அல்லது

க. பொ. த. சாதாரண தரத்தில் கணிதம், தமிழ் பாஷை உட்பட 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்கவேண்டும். இத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல்வேண்டும்.

ரொக்கப் பிணை ரூபா 7500/-

ஆதனப் பிணை ரூபா 10,000/-

**வயதெல்லை:** 23 - 40 வருடங்கள்

(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)

**பதவி:** களஞ்சியப் பொறுப்பாளர் (நிரந்தரம்)

இல. 202 — 10

855 — 1385

சம்பள அளவுத் திட்டம் ......................... 30 x 7 — 40 x 8

கூட்டுறவுப் பணியாளர்களுக்குரிய இதர படிகளும் வழங்கப்படும்;

**கல்வித் தகைமை:**

கூட்டுறவுப் பணியாளர் சம்பள அளவுத் திட்டம் 11-வது சம்பளத் திட்டத்தில் களஞ்சியப் பொறுப்பாளர், கொள்வனவு உத்தியோகத்தர் / கிளை மேற்பார்வையாளர் / கிளை முகாமையாளர் பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இதற்குச் சமமான பதவியில் 12-வது சம்பள அளவுத் திட்டத்தில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்;

அல்லது

க. பொ. த. (உ. த.) உயர் தரத்தில் சித்தி / க. பொ. த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி;

அல்லது

களஞ்சியப் பொறுப்பாளர் பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்துடன் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / கணிதம், தமிழ் பாஷை உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 23 - 40 வருடங்கள்

(சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)

பிணை - ரொக்கம் 10000/- ஆதனம் ரூபா 15000/-

**பதவி:** விற்பனையாளர் (தற்காலிகம்)

குறியீட்டு இல;- 308-15

685 — 860

சம்பளத்திட்டம்: ......................... 10x10 — 15x15

கூட்டுறவுப் பணியாளர்களுக்குரிய இதர படிகளும் வழங்கப்படும்.

**கல்வித் தகைமை:**

கூட்டுறவுப்பணியாளர் கனிஷ்ட தராதரப்பத்திரம் அல்லது 8ம் வகுப்பு சித்தியுடன் விற்பனையாளர் பதவியில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் சாதாரண தரம் அல்லது க. பொ. த. சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தி பெற்று இருக்கவேண்டும்.

ரொக்கப்பிணை ரூபா 2500/-

**வயதெல்லை:** 18-40 வருடங்கள்

(சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)

**முக்கிய குறிப்பு:**

விண்ணப்பதாரிகள் சங்கத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்வேண்டும். பதவி வெற்றிட விண்ணப்பப் படிவங்களை ரூபா 10/- செலுத்தி காரியாலய நேரங்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்;

பொது முகாமையாளர்

07-09-1995 யாழ். ப. நோ. கூ. சங்கம்

(எ-5268)

---

## வெளிவாரிப் பட்டப் படிப்பு

[ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ]

# G.A.Q. (First Examination in Arts) 1996

# 1st in Com. (First Examination in Commerce) 1996

★ இதற்குரிய பதிவுகள் யாவும் யாழ். பல்கலைக்கழகத்தால் கோரப்பட்டுள்ளது.

★ இதற்குரிய விரிவுரைகள் யாவும் நடைபெறுகின்றன.

விபரங்களுக்கு :

திருமதி எஸ். அருள்நங்கை,

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(ஏ-5273)

---

# 41-ம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் பா. நாகேந்திரம்

[ தெ. ப. பொ. உ. கூ. சங்கக் கிளை முகாமையாளர், சங்கானை ]

அன்னையின் மடியில் : 04 - 03 - 1953 ஆண்டவன் அடியில்: 01 - 08 - 1995

திதி : 10 - 09 - 1995

அன்புத் துணைவனாய், ஆசை அப்பாவாய், எம் வாழ்வின் வழிகாட்டியாய் எம்மை வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே !

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

★ இன்று ( 10 - 9 - 95 ) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியை நிகழ்விலும், 41-ம் நாள் நினைவஞ்சலியிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

சிவகுரு வீதி,

ஏழாலை மேற்கு, ஏழாலை. [ஏ-5270]

---

அச்சமில்லா நடையும் பிச்சையற்ற வாழ்வும் அதி உச்சமாகும் நம் ஈழத்தில்

# தொழிலாளர்சாசனம்-மகளிர் மகாநாடு

# மண்டைஓடுகள்-மோட்டார் தாக்குதல்

## வாரசாரம்

ச. தியாகராசா

கடந்த வாரம் ஜனதிபதி சந்திரிகா தொழிலாளர் உரிமை ஆவணம் ஒன்றை வெளியிட்டுள்ளார்இச்சாசன கடந்த மேதினத்தில வெளிவர இருந்தது. ஆனல் முதலாளிமார் சம்மேளனத்தின் எதிர்ப்பால் அது அப்போது வெளியிடப்படவில்லை. அதன் காரணமாக அமைச்சரவையில் சிறு சலசலப்பு ஏற்



பட்டது. பெர்னுட் சொயிசா அது கொண்டுவரப்படாததை ஆட்சேபித்து அமைச்சரவையிலிருந்து வெளியேறப் போவதாக மிரட்டினர். சந்திரிகா ''மாமா உங்கள் சேவை எங்களுக்குத்தேவை'' என்று கூறி ஒருவாறு அவரைச் சமாளித்தார். இப்போ அது ஒன்பது அத்தியாயங்களைக்கொண்ட ஒரு சாசனமாக வெளிவந்துள்ளது.

### தொழிலாளர் சாசனம்

இச்சாசனம் தொழிற்சங்க அமைப்புக்களின் உரிமைகளைப் பேணுவதாக அமைந்துள்ளது. தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை உருவாக்கவும் அவற்றில் இணையவும் இச்சாசனம் வழி வகுக்கிறது. தொழிற் சங்கங்களுக்கு எதிராக தொழில் கொள்வோர் பாரபட்ச நடவடிக்கை எடுப்பதும் இச்சாசனத்தின் மூலம் தடுக்கப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் தடையாக இத்திட்டம் இருக்கும் என தொழில் முதலீட்டாளர்கள் கருதுகின்றனர். அவர்கள் சந்திரிகாவின் அரசை பொதுஉடமை அரசு என்று தப்பாகக் கணித்துவிட்டார்கள்போல் தெரிகிறது. இச்சாசனம் வெறும் சாசனமாகத்தான் வெளியிடப்பட்டுள்ளது. அது சட்டமாக்கப்படும் வரை எவரையும் அது கட்டுப்படுத்தாது. முதலாளித்துவ நலன்களுக்கு எதிராக சந்திரிகா அரசு இச்சாசனத்தைச் சட்டமாக்கும் என்று எவராவது எண்ணினல் அது பகற்கனவுதான்.

### மகளிர் மகாநாடு

ஐ. நா.வின் சர்வதேச மகளிர் மகாநாடு இம்முறை பீக்கிங் நகரில் நடந்து கொண்டிருக்கிறது. தொடக்கத்தில் மகாநாட்டுக்குச் சென்ற பிரதிநிதிகளை சீனப் பொலிசார் கண்காணிக்கத் தொடங்கியதால் சிறு முணுமுணுப்புக்கள் தோன்றினலும் ஏதோ ஒரு வகையில் மகாநாடு நடந்து முடிந்தது. இம்மகாநாட்டுக்கு இலங்கையின் வடமாகாண கிழக்கு மாகாணப் பெண் பிரதிநிதிகளும் சென்றுள்ளனர். கிழக்கு மாகாண ''பன்பாய்'' எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சீனப் பெரும் சுவரில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாம். .பன்பாய் இழைக்கும்பெண்தொழிலாளியும் மகாநாட்டில் பங்கு பற்றினரா என்பது தெரியவில்லை.

### மண்டை ஓடுகள்

எம்பிலிப்பிட்டியாவில் இராணுவத்தினர் நடத்திய கொலைகளை தனக்குச் சாதகமாகப் பாவித்து பிரசாரம் செய்து சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வந்தார். ஆனல் அது சம்பந்தமாக இராணுவத்தினருக்கும் மற்றையோருக்கும் எதிராக தாக்கல் செய்த வழக்கு நத்தை வேகத்தில் நகருகிறது. இந்த வழக்கு 5-9-95 இல் விளக்கத்துக்கு எடுக்கப்பட்ட போது சாட்சி ஒருவர் சமூகமளிக்காமையால் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. ஒரு சாட்சியை நீதிமன்றுக்கு கொண்டு வருவதற்கு அரசுக்கு நாலு மாதம் தேவைப்படுகிறது. அரச இயந்திரம் ஆமை வேகத்தில் நகருகிறதா அல்லது பொலிசார் புதிய அழிப்புகளில் ஈடுபட்டமையால் நேரம் போதவில்லைப் போலும்.

### மோட்டார் தாக்குதல்

இந்தவாரம் இராணுவ வட்டாரங்களும், பாதுகாப்பு அமைச்சும் விடுதலைப் புலிகள் பலாலி விமானத் தளம் மீது எறிகணைத் தாக்குதலை நடத்தினர் என்று அறிவித்துள்ளனர். அதன் காரணமாக இருவர் கொல்லப்பட்டனர் என்



றும் பதினறுபேர்படுகாயமடைந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது. 81 மி. மீ மோட்டார் குண்டுகளால் விமானத் தளம் தாக்கப்பட்டதாம். இவ்வளவு காலமும் மற்றவர்களுக்கு ஷெல் அடித்தவர்கள் இப்போது ஒரு மாற்றத்திற்கு தாங்களே ஷெல் அடிக்குள்ளாவது நிச்சயம் ஒரு திருப்புமுனை தான்.

நமது நோக்கு

# தீவக மக்களின் கதி

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கே சிறிலங்கா அரசு யுத்தத்தை மேற்கொண்டுள்ளது என்று கூறுகிறது. ஆனல் தமிழ் மக்களோ என்ருல் தம்மை விடுவித்துக்கொள்ள விரும்பாது படையினரைக்கண்டதும் இடம்பெயர்ந்து ஓடிவிடுகிருர்கள். வயோதிபர்கள், நோயாளிகள்போன்ருேரே படையினரால் விடுவிக்கப்படுகின்றனர். அப்படி விடுவிக்கப்பட்ட மக்களுக்கு என்ன நடக்கிறது? உதாரணமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தீவகப் பகுதியில் ஒடித் தப்பாது எஞ்சியிருக்கும் ஆட்களுக்கு என்ன நடக்கிறது?

அண்மையில் ஐரிஸ்மோனுவில் பயணம் செய்த பயணிகள் விடுதலைப் புலிகளினல் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டபோது அப்பயணிகள் கூறிய சோகக் கதைகள் நெஞ்சை உருக்குவனவாக உள்ளன,

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப்பகுதி மருத்துவ மனைகளில் பனடோல் குளிகைகளைத் தவிர வேறு மருந்து கிடையாது. கப்பல் வந்தால் தவிர மரக்கறி இல்லை. வெற்றிலை இல்லை. குத்தரிசியைக் கண்ணிலும் காணமுடியாதாம். எல்லாம் அம்மாப் பச்சை அரிசிதான்.

தீவுப்பகுதியில் கடலில் மீன் பிடிப்பதற்குப் படையினரின் அனுமதி பெறவேண்டும். அதுவும் பகலில் இடுப்பளவு தண்ணீரில் நின்று தான் மீன் பிடிக்க முடியும். உரம் இல்லாததால் வாழை, புகையிலை, மிளகாய் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யமுடியாத நிலை.

மருத்துவ மனைகள் தீவுப்பகுதிகளில் இருந்தும் திருகோணமலைக்கும், கொழும்புக்கும் சென்றே சிகிச்சை பெறவேண்டியுள்ளது. இவ்விடங்களுக்குச் செல்வதற்கு படையினரின் அனுமதி மாத்திரமன்றி ஈ. பி. டி. பி. யினரின் அனுமதியும் பெறவேண்டும். ஐரிஸ்மோனுக் கப்பலில் பயணம்செய்தோர் அநேகமானேர் சிகிச்சை பெற்றும் மகபபேறு பெற்றும் திரும்பியவர்களாக இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா அரசு முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையின் போது 78 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைக் கைப்பற்றியுள்ளதாகவும் அங்கு அரச அதிபர் உட்பட சிவிலியன் உத்தியோகத்தர்களைக் கொண்டு சிவில் நிர்வாகத்தை நடத்தப்போவதாகவும் பறை சாற்றிற்று. தீவகப் பகுதி மக்கள் படும் துயரை நோக்கினல் வலிகாமம் மேற்கிலும் அதேநிலை தான் நிலவியிருக்கும். ஆனல் சிறிலங்கா அரசு தான் முதலில் கைப்பற்றிய வலிகாமம் மேற்குப் பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றி சிவில் நிர்வாகம் நடத்தத்தான் எண்ணியிருந்தது. சிங்களவர்கள் என்ருல் அவர்களுக்கு சகல வசதிகளும் இன்னும் மேலதிக சலுகைகளும் கிடைத்திருக்கும். காரணம் அவர்கள் சிங்களவர் என்பதே. ஆனல் புலிப் பாய்ச்சல் நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகள் அரசின் கற்பனையை முறியடித்து விட்டனர். தனது பிரசைகள் என்று கூறப்படும் தீவகத் தமிழர்கள் புறக்கணிப்பட்டு இம்சைப்படுத்தப்படுகின்றனர். இது தான் சிறிலங்கா அரசின் தார்மீக ஆட்சி.

தனது தீவகப் பகுதிகளில் வாழும் தமிழ்ப் பிரசைகளுக்கு முறையாக உண்ண உணவு தானும் வழங்க முடியாத சிறிலங்கா அரசு தமிழர்களை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து காப்பாற்றி அபிவிருத்தி வேலைகளைத் தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்போவதாகக் கூறும் வார்த்தைகள் உண்மையில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக வைத்து ஆழ்வதற்கேயாகும்.

# பிரான்சின் அணுகுண்டுப் பரிசோதனையும் உலகில்

# வெடிக்க இருக்கும் 50,000 அணுகுண்டுகளும்

## உலக வலம்

ஸச்சி

பிரான்ஸ் அண்மையில் தென் பசுபிக் பிராந்தியத்தில் அணுகுண்டுப் பரிசோதனை ஒன்றைச் செய்ய இருக்கின்றது, இதற்கு .அவுஸ்திரேலியா, கனடா போன்ற பல நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

கடந்த வாரம் பிரான்சின் விமானமொன்றை 289 பிரயாணிகளுடன் அணுகுண்டுப் பரிசோதனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒருவரால் கடத்தப்பட்டு ஜெனிவாவில் இறக்கப்பட்டது.

இன்று உலக ரீதியில் அணுகுண்டுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் இவ்வேளையில்:

உலக நாடுகளில் கையிருப்பில் ஏறக்குறைய ஐம்பதினயிரம் அணுகுண்டுகள் இருக்குமென இராணுவ வல்லுநர்கள் கருதுகின்றனர். வல்லரசுகள் தங்கள் வசமுள்ள அணு ஆயுதங்களில் ஐந்து சதவீதமானவற்றை ஒன்றுக்கெதிராக மற்றையது பயன்படுத்துமாகில் ஒரு சில நிமிடங்களில் இருபது கோடி மக்கள் இறக்கும் அபாயம் உள்ளது. இது இரண்டாவது உலக மகாயுத்தத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் நான்கு மடங்காக இருக்கும்.

இவை மட்டும் மனித குலத்தை அச்சுறுத்தவில்லை. இன்றைக்கு, வல்லரசுகளிடமிருக்கும் யுத்தக் கப்பல்களில் 192 வித்தியாசமான குறியிலக்குகளை வெடிக்க வைப்பதற்குப் போதுமான அணுசக்தி ஏவுகணைகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றின் வெடிப்பாற்றல் ஹிரோஷிமாவை அழித்த அணு குண்டைக் காட்டிலும் எட்டு மடங்கு அதிகமாகவுள்ளது.

மேற்கு ஆபிரிக்காவில் வழமையிலுள்ள பழமொழியொன்று, இப்படிக் கூறுகின்றது. 'யானைகள் சண்டை போடும் போது புல்லும் பாதிக்கப்படும்'' அதேவிதமாக அணு யுத்தத்தின் விளைவுகள் வெறுமனே போரிடுபவர்களை மாத்திரம் பாதிப்பதாக இருக்காது. அணுயுத்தத்தில் கிரகத்தில் உயிர்தப்பும் ஒவ்வொருவரும் ஆபத்திலிருப்பர் மனித குலம் பூண்டோடு அழிக்கப்படும் உண்மையான அபாயம் இருப்பதாக ''யுத்த விவகாரங்கள் சஞ்சிகை'' கருத்து வெளியிட்டுள்ளது.

இத்தகைய கொடிய விளைவை ஏற்படுத்தும் அணுகுண்டின் உற்பத்தியை நிறுத்துவதற்கு ஐ. நா. சபை மூலம் சகல நாடுகளும் தனது அணுசக்தி இரகசியங்களை வெளிப்படுத்திக் கைவசமுள்ள அணுகுண்டுகளை ஒழித்து இனிமேலும் அவைகளை உற்பத்தி செய்யாதிருப்பதற்கு ஒப்பந்தம் செய்ய வேண்டுமெனக் கேட்டிருந்தது. ஆனல் நேற்றுவரை எந்த வல்லரசுகளும் இவ்வொப்பந்தத்துக்கு செவிசாய்க்கவில்லை. இதனல் உலகநாடுகளில் இடம் பெற்று வரும் போர்களில் அணுஆயுதங்களை ஐ. நா. கட்டுப்படுத்தும் என்ற நம்பிக்கை மனிதகுலத்தை அவநம்பிக்கை கொள்ள வைத்து வருகின்றது.

சோவியத்யூனியனிடமிருந்தும் [I C B M[ கண்டம் விட்டுப் கண்டம் பாயும் ஏவுகணைகள் மனித நேரங்களுக்குப்பதிலாக ஒரு சில நிமி

(7ம் பக்கம் பார்க்க)

# கோவில்களும், தேவாலயங்களும் தாக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும்

யாழ்ப்பாணத்து அண்மைக்கால நடவடிககைகள் பற்றி பேராயர் அதி. வண. ஜெபநேசன அவர்களுடனுன ஒரு சந்திப்பு

கேள்வி: பேராயர் அவர்களே உங்களது திருச்சபைக்கு தென்னிந்திய திருச்சபை என்றபெயர் எப்படி வந்ததுஎன்றுகூறமுடியுமா?

பதில்: எமது திருச்சபையின் ஆரம்பகாலப் பெயர் ''அமெரிக்கன் மிஷன்'' என்பதாகும். தென்னுசியநாடுகள் சுதந்திரமடையுமுன் தென்னிந்தியாவில் பல்வேறு புரட்டஸ்தாந்து சபைகள் தென்னிந்திய சபை என்ற இணையத்திற்கான திட்டத்தினை ஏற்படுத்திக்கொண்டன.செ ன்,மதுரை. யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பணியாற்றிய அமெரிக்கன் மிஷன்சபைகளும் இதில் இணைவதற்கு உடன்பட்டன. இலங்கையிலே புரட்டஸ்தாந்து சபைகள் இணையும்பொழுது ''இலங்கையின் ஐக்கிய திருச்சபையில்'' சேர்ந்துகொள்ளலாம் என்று அப்பொழுது தீர்மானிக்கப்பட்டது. ஆனுல் இலங்கையில் நிலவும் பல்வேறு உணர்வுகளிஞல் இதுவரை இந்த ஐக்கியம் சாத்தியப்படவில்லை.

கேள்வி: அமெரிக்கன் மிஷன் யாழ்ப்பாணத்தில் மட்டும் பணியாற்றியதன் காரணம் என்ன?

பதில்; அமெரிக்கன் மிஷன் இலங்கைவந்தபொழுது, காலனித்துவ போட்டாபோட்டி உச்சக்கட்டத்தில் இருந்தது, அமெரிக்கன் மிஷன், இந்தியாவில் பணியாற்றக்கூடாது என்று பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி தடைபோட்டிருந்தது. இலங்கையின் தேசாதிபதி யாழ்ப்பாணத்தில் மட்டும் பணியாற்ற அவர்களை அனுமதித்தார். இந்தியாவில் இத்தடை 1833ல் தான் நீக்கப்பட்டது.

கேள்வி: அமெரிக்கன் மிஷன் கிறிஸ்தவர்களாகிய, தந்தை செல்வா, டாக்டர் நாகநாதன் பேராயர்குலேந்திரன் பேராயர் அம்பலவாணர் முதலியோர் தமிழ் உணர்வுமிக்கவர்களாக இருப்பதன் காரணம் யாது?

பதில்; அமெரிக்கன் மிஷனரிமார் ஆங்கிலேயரன்று; சுதந்திர உணர்வுகளை வளர்த்தவர்கள். ஆங்கிலேயருக்கெதிரான உணர்வுகள் அவர்களுடைய நிறுவனங்களில் தலைதூக்கியபொழுதும் அவற்றினைக்கட்டுப்படுத்த அவர்கள் முனையவில்லை. இந்த மரபின் வழியாகவே இன உணர்வு கொண்ட தலைவர்கள் தோன்றினுர்கள்.

கேள்வி: தென் இந்திய திருச்சபை தற்போதைய சூழ்நிலையில் எத்தகைய சேவைகளை மக்களுக்கு செய்து வருகின்றது?

பதில்: இப்பொழுது நாம் செய்யவேண்டிய முக்கியமான வேலை உயிர்களைக் காப்பது தான்உயிர்களைக்காப்பதானுல் எறிகணைத்தாக்குதல்களும் குண்டுவீச்சுகளும் துப்பாக்கி சூடுகளும் நிற்கவேண்டும். இதனை நிறுத்தவே நாம் பாடுபடுகின்றேம், 'முன்னேக்கிப் பாய்தல்' நடவடிக்கையின் போது எமது பிரதேச மக்கள் படுகின்ற அவலங்கள் வேதனை அளிப்பனவாக இருந்தன. குறிப்பாக, ஜூலை மாதம் 12ம் திகதி யாழ். வைத்தியசாலையில் நான் கண்டகாட்சி என் மனதை உருக்கியது. ''யார் போய்க் கூறுவார்? இந்தஏழையின் வேதனை'' என்ற அடிகளே என்மனதிற்கு வந்தன. உடனடியாகவே நான் கொழும்புக்கு புறப்பட்டு முக்கியமான தலைவர்களையும் வெளிநாட்டு தூதுவர்களையும், நமது திருச்சபையின் நண்பர்களையும் சந்தித்து நடந்தவற்றை கூறினேன்;

கேள்வி: ஆகஸ்ட் 23ம்திகதி தங்களைப்பற்றி ஒரு செய்தியை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் வெளியிட்டிருந்ததே இதனைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?



பதில்: ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின்போது நமது மக்கள் பட்ட இன்னல்களைப்பற்றி உலகத்தாருக்குச் சொல்லிவிட்டேன் என்று அரசு சினமடைந்துள்ளது.

நவாலிதேவாலயம், கென்னத்முல்டர் விவகாரம் கொள்கலன் பிரச்சினை என்று புதிய புதிய பிரச்னைகள் உருவாக்கப் பட்டுவருகின்றன. அவசிய மேற்படும் வேளையிலும் தனது சொந்த நலனுக்காக பேசாடமந்தையாக இருப்பதே மாபெரும்பாவம்.

கொள்கலன் பற்றிய விளக்கத்தை கொழும்பிலுள்ள நமது திருச்சபை அங்கத்தவர்கள் எழுதிப் பத்திரிகைகளிற் பிரசுரித்துள்ளனர். கொள்கலனை அனுப்பியது யார்? எப்போது அனுப்பப்பட்டது? அதனை இறக்குவதற்கு அரசு ஏன் முட்டுக்கட்டை போட்டது? கொள்கலனில் இருந்த பொருட்கள் யாவை? என்பன பற்றியெல்லாம் அந்த அறிக்கையிற் கூறப்பட்டுள்ளது. இந்தக் கொள்கலனில் எந்தக் குழுவாவது இராணுவ நோக்கிற்குப் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் எவையுமே இருக்கவில்லை.

அரசாங்கம் ஒரு கல்லில் அனேக மாங்காய்களை விழுத்தப்பார்க்கிறது! அவ்வளவு தான் !

கேள்வி: இன்று இலங்கை படைகள் மதஸ்தாபனங்கள் மீதும், கோவில்கள் மீதும் தாக்குதல் நடத்துவதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: கோவில்களும், தேவாலயங்களும் உயிர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவை என்று மக்கள் நம்பியிருக்கின்றனர். அந்த இடங்களிலும் தாக்குதல் நடாத்தப் பட்டால் மக்கள் என்னசெய்ய முடியும்? அந்த இடங்களிற்கு வரும் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கமுடியவில்லை யென்றுல் அது மதத் தலைவர்களுக்கு மிகுந்த அவமானத்தையும் வேதனையையும் உண்டாக்கும். ஆகவே இந்த சம்பவங்கள் தொடர்ந்து நடைபெருதிருக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

கேள்வி: முன்னேக்கி பாய்தல் நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணகல்லூரிக்கும், உங்களது தலைமைக் காரியாலயததிற்கும் ஏற்பட்ட இழப்புகள் யாவை?

பதில்: முன்நோக்கிப் பாய்தல் நடவடிக்கை வலிகாமம் மேற்கு பகுதியிலுள்ள நமது சகல நிறுவனங்களையுமே பாதித்தது. மானிப்பாய் வைத்தியசாலை அமெரிக்க - இலங்கை மிஷன் அச்சகம், யாழ்ப்பாணக்கல்லூரி, தொழில்நுட்பபிரிவு பேராயர் இல்லம் என்பன பாதிப்புக்குள்ளாகின. பல மதிற் சுவர்கள் சங்கிலித்தொடர்வண்டிகளினுல் நாசமாக்கப்பட்டுள்ளன. பலவீடுகள் சூறையாடப் பட்டுள்ளன, மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்தனர். நவாலியில் எமது திருச்சபையைச் சேர்ந்த சில அங்கத்தவர்கள் கொல்லப்பட்டனர்,

கேள்வி: தேசிய கிறிஸ்தவ சபை தலைவராக சென்ற மாதம் நீங்கள் தெரிவுசெய்யப்பட்டதாக கேள்விப்பட்டோம். இதனைப்பற்றி சிறிது கூறுவீர்களா?

பதில்: தேசியகிறிஸ்தவசபை என்பது இலங்கையிலுள்ள சகல புரட்டஸ்தாந்து சபைகளினதும் சம்மேளனம் ஆகும் அதாவது: அங்கிலிகன். மெதடிஸ்ற், பப்ரிஸ்ட். ஒல்லாந்து சீர்திருந்திய சபை முதலிய சபைகளின் கூட்டமைப்பு, இரண்டுவருடத்திற்கு ஒரு முறை புதிய தலைவரைத் தெரிவு செய்வார்கள். இம்முறை தென்னிந்திய திருச்சபை ஆயரை தெரிவு செய்துள்ளனர். கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பு அங்கிலிகன் திருச்சபை ஆயர் அதி வண, கெனத் பெர்ஞன்டோ தலைவராகப் பணியாற்றினுர்.

சந்திப்பு: மணிசேகரன்

# கருத்திற் காலாவதியான கே. எம். டி. சில்வாவும் தமிழர் தாயகக் கோட்பாடும்

## தாயகத்திற்கு கல்வெட்ட ஆதாரம் தேவையில்லை

ஈழத்தமிழரின் தாயகக் கோட்பாட்டைப் பற்றியும், சந்திரிகாவின் தீர்வுத்திட்ட யோசனைகளை பற்றியும் கடுமையான கருத்துக்கள் கொழும்புப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்தவண்ணம் உள்ளன.

ஈழத்தமிழருக்கு என்ருெரு தாயகம் இல்லை என்ற கருத்தினை சிங்களப் புத்திஜீவிகள் ஏட்டளவிலும் தம் மனத்தளவிலும் ஸ்தாபித்துள்ளனர். வரலாற்றுப் பேராசிரியர் கே. எம். டி. சில்வா குறிப்பாக 1985-ம் ஆண்டில் இருந்து இதுபற்றி பேசியும் எழுதியும் வருகிறுர்.

1987'ம் ஆண்டு இதுபற்றி அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல் 1994-ம்ஆண்டு இரண்டாவது பதிப்பிற்கு உள்ளாகி 1995-ம் ஆண்டு மீள்பதிப்பிற்கும் உள்ளாகியுள்ளது. இது மும்முறை அச்சிடப்பட்டுள்ளமையானது இதற்கு சிங்களவர் கொடுக்கும் முக்கியத்துவத்தினையும் வரவேற்பினையும் பறைசாற்றுகின்றது.

தமிழருக்குத் தாயகம் இல்லை என்று கூறுவோர் கே. எம். டி. சில்வாவின் வாலிற் பிடித்துத் தொங்குகின்றனர். தமிழரின் தாயகக் கோட்பாட்டை இவர் எள்ளி நகையாடுகிறுர். இது ஒரு ஐதிகம், கற்பனைக் கட்டுக் கதை என்று கூறுகின்றுர்.

''...கிழக்கு மாகாணம், கண்டி இராச்சியத்தின் ஒரு பகுதியாய் இருந்தது. குறுங் கால ஆயுளைக் கொண்டிருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் பகுதியாய் கிழக்கின் அனேகமான கடலோரப் பகுதி ஒருபோதும் இருக்கவில்லை...14-ம் நூற்ருண்டின் இறுதிவரை சிங்கள வன்னியர் தலைவன் திருகோணமலையில் இருந்துள்ளமைக்கான சான்றுண்டு. மட்டக்களப்புப் பிரதேசம் ஒருபோதும் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பகுதியாய் இருக்கவில்லை. [The ''Traditional Homelands'' of the Tamils: Separatist ideology in Sri Lanka: A Historical Appraisal, பக். 40]

இவ்வாறு கிழக்கு மாகாணத்தைப் பற்றித் தனது மேற்படி நூலில் கூறிய கே. எம். டி. சில்வா வடக்கு மாகாணத்தைப் பற்றிக் கூறுகையில் அப்போது கலாநிதி கா. இந்திரபாலா (பின் பேராசிரியர்), பேராசியர் நடராசா ஆகியோர் 1960 களில் எழுதிய கருத்துக்களை ஆதாரம் காட்டி வடமாகாணத்திலும் தமிழருக்கு பாரம்பரியத் தாயகம் இல்லை என்று மறுக்கிறுர்.

கலாநிதிப்பட்ட ஆய்விற்காக 1966-ம் ஆண்டு இந்திரபாலாவால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையின சாராம்சம் 1969-ம் ஆண்டு ஆங்கில சஞ்சிகை ஒன்றில் வெளிவந்திருந்தது. அதிலிருந்து பல பகுதிகளை மேற்படி தனது நூலில் மேற்கோள்களாக கே. எம். டி. சில்வா காட்டுகிறுர்.

கி. பி. 13-ம் நூற்ருண்டிற்கு முன்பான தமிழரின் குடியிருப்புப் பற்றிய வரலாருனது முற்றிலும் கற்பனைக் கதைகளையும் நம்பகமற்ற ஆதாரங்களையும் கொண்டு கட்டி எழுப்பப்பட்டுள்ளதாகவும், கி. பி. 10-ம் நூற்ருண்டிற்கு முன் தமிழ் வர்த்தக சமூகத்தின் நிரந்தரக் குடியிருப்புக்களோ அன்றிப் பரந்தளவு குடியிருப்புக்களோ இருந்ததாகக் கூறுவது கடினம் என்றும் இந்திரபாலா எழுதிய கருத்துக்களை 24-ம் 25-ம் பக்கங்களில் கே. எம். டி. சில்வா சுட்டிக்காட்டி தமிழர் தாயகக் கோட்பாட்டை நிராகரிக்கின்றுர்.

இந்திரபாலா 1966-ம் ஆண்டு எழுதியதை கே. எம். டி. சில்வா 1995-ம் ஆண்டு தூக்கிப்பிடித்து எழுதுகிறுர். ஆனுல் 1960களில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களை கொண்டே தான் இவ்வாறு எழுதியதாகவும், 1970களின் இறுதிப் பகுதியைத் தொடர்ந்து புதிய ஆதாரங்கள் கிடைக்கத் தொடங்கியதும் தனது மேற்படி பழைய கருத்து மாறிவிட்டதென்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தென்னுசியவியற் கருத்தரங்கு அறையில் நிகழ்ந்த கருத்தரங்கொன்றில் இந்திரபாலா தெரிவித்தார். ஆனைக் கோட்டையில் நிகழ்ந்த அகழ்வாய்வின்பின்னர்இந்திரபாலா இக்கருத்து மாற்றத்தினைப் பரவலாகத் தெரிவித்தார்.

மு. திருநாவுக்கரசு

Jaffna Hand Book எனும் நூல் 1981-ம் ஆண்டு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் அலுவலகத்திஞல் தயாரிக்கப் பட்டது. இந்நூலில் History என்றதலைப்பில் இந்திரபாலாவால் ஒரு கட்டுரை எழுதப் பட்டது. கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நிரந்தரக் குடியிருப்புக்களைக் கொண்ட வரலாறு யாழ்ப்பாணத்தில் தமிழருக்கு உண்டு என்று அவர் அந்தக் கட்டுரையில் எழுதியுள்ளார்.

மேற்படி கைநூல் தயாரிப்பு வேலைகள் முழுவதும் முற்றுப்பெற்று நூல் வெளியீட்டுக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்த நிலையில், நூல் வெளியீட்டிற்கு ஒரு சில தினங்களுக்கு முன் மேற்படி இந்திரபாலாவின் கட்டுரைக்காக அந்த நூலை வெளியிடவேண்டாமென அரசாங்கம் தடை செய்தது.

யாழ்ப்பாணத்தின் ஆதிக் குடியிருப்புக்கள் பற்றி பொ. இரகுபதியினுல் கலாநிதிப் பட்ட ஆய்விற்காக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆய்வுக்

(7ம் பக்கம் பார்க்க)

**சிறு கதை**

# இனி ஒரு விதிசெய்வோம்

**பொன். பாலகுமார்**

அந்த அதிகாலைப் பொழுதில் வாய்க்காலில் நீரோட்டம் பிரவாகித்துப் பாய்ந்து கொண்டிருந்தது. றோட்டுக்குச் சமாந்தரமாகப் பாயும் வாய்க்காலை அணி செய்து கிடக்கும் பச்சைப் பசேலென்ற பெரு வயற்பரப்பைத்தாலாட்டி வந்த அதிகாலைப்பொழுதின் இளம் குளிர்காற்று வயலையும் வாய்க்காலையும் பிரித்து நிற்கும் காட்டு மரங்களைக் கட்டித் தழுவி மாரிமுத்துக் கிழவரில் பட்டுப்பரவியபோது ஒரு சுகம் அவரில் தெரிந்தது. ஆனாலும் அவரின் மனம் புகைந்துகொண்டிருந்தது.

''சந்திரன் மூண்டுநாளா ஏன் வீட்டை வரவில்லை......'' என்ற கேள்வி அந்த அதிகாலைப்பொழுதின் இதத்தையும் இனிமையையும் சிதறிச் சின்னபின்னமாக்கிவிட்டு மனத்தை எங்கெங்கல்லாமோ சிறகடிக்க விட்டிருந்தது. அவர் எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடிக்கும்

''சந்திரன் மூண்டு நாளா ஏன் வரவில்லை'' கேள்வியாய் தொடர்ந்தது. விசர் பிடித்தவர்போல் மாரிமுத்துக் கிழவர் நடந்துகொண்டிருந்தார். சந்திரனைக் காணாத அந்த மூன்று நாட் பொழுதும் அவரிற்கு மூன்று வருடங்கள் காணாதது போன்ற பிரமையை ஏற்படுத்தியிருந்தது.

''சூடடிப்புக் காலமெண்டாலென்ன......மிளகாய் ஆச்சல் காலமெண்டாலென்ன ஒரு நேரமாவது அவன் தலைகாட்டத் தவறவில்லையே...... பின்னை ஏன் மூண்டு நாளா வரயில்லை......''

சந்திரனின் பிரசவத்தன்று அவன் தாய். அவரது மருமகள் இறந்தபோதோ வயலில் இராக்காவலிற்காக சென்றபோது ஆட்லறி ஷெல் பட்டு அவர் ஒரே மகன் மணியம் உடல்சிதறிக் கிடந்தபோதோ உணரப்படாத ஒரு இழப்பை மூன்று நாட்களாய் அவர் அனுபவித்துக் கொண்டார்.

''சந்திரன் மூண்டு நாளா ஏன் வரவில்லை .....''

சந்திரன் பிறந்தநாள் முதல் அவரிற்கு பிரிய முடியாதவனுகிவிட்டான். மனைவியின் இழப்பை மணியம் தோட்டத்தோடும்......வயலோடும் ஒன்றி மறக்க தோட்ட வேலையிலிருந்து நிரந்தர ஒய்வு பெற்ற மாரிமுத்தர் சந்திரனைத் தாலாட்டுவதும், நிலாக் காட்டி சோறு தீத்துவதும், கதை சொல்லி அவன் பொழுதைக் கழிப்பதும், கூடி விளையாடுவதும், பள்ளிக் கூடத்துக்குக் கூட்டிச்செல்வதும் அங்கு சந்திரன் அழுதபடியே ''அப்பு......அப்பு...... நீயும் நில்லணை'' என்பதும் அவர்பள்ளித்திண்ணைக்குந்தில் குந்தியிருப்பதும்.........

''டொம்...... டொம்......... டொம்.........''

ஆட்லறி ஒன்று சீறிப் பாய்ந்து சென்று எங்கோ தொலைவாக வீழ்ந்து வெடிக்கிறது.

''காலங்காலத்தாலை தொடங்கியிட்டாங்கள்......'' சைக்கிளொன்று மின்னல் வேகத்தில் பறக்கின்றது. நடந்த மாரிமுத்தரின் இதயம் பனிக்கட்டியாய் குளிர்ந்து உறைந்தது. ஒரு கணம் நின்றார். அவர் கண்கள் பனித்தன.

''உந்தக் கோதாரியில்லை யெண்டா.........இண்டைக்கெனக்கேன் இந்த அவசரம்''

மணியத்தின் நினைவுகள் அவரையறியாமலே அவருள் எழத் தொடங்கின. ''மணியன்ரை ஊக்கத்தையும் முயற்சியையும் பாத்து பெருமைப்பட்டன். இண்டைக்கு அவனில்லை......சந்திரனைப் பார்த்து இந்த ஊரே பொருமைப்பட்டுது...

மீண்டும் நடக்கத்தொடங்கினார். பிரதான வீதியிலிருந்து வாய்க்காலிற்கு மேலாகச் செல்லும் சிறு மரப் பாலத்தை கடந்தபோது கமம் கம்பீரமாகத் தெரிந்தது.

''அம்பதிலை நான் வரயுக்கை இவ்விடம் கிடந்த கிடை......'' அவரையறியாமலே அவர் வாய் உச்சரித்தது.

ஐம்பதுகளில் உறவினர்களினதும், நண்பர்களினதும் அர்ச்சனைகளிற்கு மத்தியில் மனைவியுடனும் ஏழு வயதான மணியத்துடனும் கிளிநொச்சிக்கு துணிச்சலோடு வந்தார்.

''மலேரியாவுக்கு உதுகளைக் காவு கொடுக்கப் போறியே'' அவரது தாயின் புலம்பல் மாரிமுத்தர் மனந்தளராது போராடினார். உடல் சோராது முயன்றார். இவற்றின் பிரசவம்தான் அந்தக் கமம்.

''ம்ம்ம்......நீண்ட பெருமூச்சொன்றுஅவரிற்பிறந்தது. காட்டு மரக் கட்டைகள் ஒரேயளவு உயரத்தில் நிரையாக நாட்டப்பட்டு முட்கம்பியால் அரண் செய்யப்பட்டுக் கிடந்த அந்த நிலப்பரப்பெங்கும் பசுமை நிறைந்து கிடந்தது. மதாளித்த தண்டுகளுடன் மூட்டுப்பிரிந்து கிடக்கும் வெங்காயமும் அதனேடு போட்டியிட்டு ''நீ முந்திநான் முந்தி'' என வளர்ந்து நிற்கும் மிளகாயும் மாரிமுத்துக் கிழவரிற்கே பொருமைத் தீயை வளர்க்கத் தலைப்பட்டன. ஒரு மூலையில் தென்னஞ் சோலையின் நடுவே மெழுகப்பட்டு அமைதியாகக் காட்சி தந்த மண் கொட்டில். அதற்கு முன்னே சந்திரனின் ''சாளி'' தவம் கிடந்தது.

''சந்திரன்........சந்திரன்'' குரல் கொடுத்தவாறு மாரிமுத்தர் உள்ளே நுழைகிறார். சந்திரன் மண் நிலத்தில் குப்புறக் கிடக்கிறான்.

''சந்திரன் ஏனடா...என்ன நடந்தது''

அவன் மௌனித்துக் கிடந்தான. மாரிமுத்தரிற்குக் போபம் பொத்திக்கொண்டு வந்தது.

''இனி மருந்தடிக்கத் தேவையில்லை...... ...... குடிக்க வேண்டியதுதான்'' மாரிமுத்தர் மீண்டும் உறைந்தார். இதயத்து நெருடல் தொடர்ந்தது''

''என்ன உழட்டுறாய்......''

''ஐயா பட்ட கடனை பதினறு வயதிலை மாடா உழைக்சு அடைச்சன். இன்டைக்கு கடன்பட்டு இந்தத் தோட்டதுக்கை போட்டிருக்கிற முதலை என்னெண்டு அடைக்கப் போறன்......''

மாரிமுத்தரின் தலை பூமியின் வேகத்தில் சுற்றியது தலைவாசலில் குந்திச் சாய்ந்து கொண்டார்.

''அப்பு .....அங்கை பாரணை எவ்வளவோ கடன்பட்டு, இராப்பகலாக தோட்டத்துக்கை விழுந்து விழுந்து உழைச்சு, பக்குவமாக செய்து, வெங்காயம் மூட்டுப் பிரியிற நேரத்திலையும்...மிளகாய் வளர்ந்து கொப்பு வைக்கிற நேரத்திலையும் உரத்தை நிப்பாட்டிப்போட்டாங்கள். யூரியாதான் இல்லையெண்டா. இண்டைக்கு அமோனியாவும் இல்லை..ரீ டி எம் உம் இல்லை. ஒரு கிழமையாக வேட்டை நாயாட்டம் அலைஞ்சுபோட்டுக் கிடக்கிறன். போன போகத்திலை உருளைக்கிழங்கிலை தொங்கினதை இதாலையாதல் நிமித்தலாமெண்டால்.........எல்லாத்தையும் நினைக்க விசர் வந்திடும்போல

''நான் கேக்கிறென் ... நீ பேசாமல் கிடக்கிறாய்''

சந்திரன் நிமிர்ந்து மாரிமுத்தரைப் பார்த்தான். அவன் கண்கள் அழுதழுதே வற்றிப்போயிருந்தன. எரிமலையொன்று வெடித்துச்சிதறியது போன்ற பிரமை. அக்கணப்பொழுது மின்னலுள் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு

''தம்பி.......அழாதை....... ஏனப்பு என்ன நடந்ததென்று சொல்லன்......''

கிடக்கு'' விம்மி வெடித்தான் சந்திரன்.

''ஐயா...நீயும் நானும் பட்ட கஷ்டங்கள் எங்களோடை முடியட்டும். என்ரை பிள்ளைக்கு வேண்டாம். அவனை எப்படியும் படிப்பிச்சு ஆளாக்க வேணும்'' மணியம் தன் மனைவி செத்த கையோடு இந்த நம்பிக்கையோடுதான் உழைத்தான். அதைநினைத்துப் பார்த்தபோது மாரிமுத்தரில்

[7-ம் பக்கம் பார்க்க]

**கவிமலர்**

## ''காட்டிக் குடுக்கிறவன் காத்திலயும் நஞ்சிருக்கும்''

நல்லதம்பி குஞ்சனையோர்
நாய் கடித்துச் செத்ததென்று
வெள்ளிமயில் தவறணையில்
வெளியிட்டார் ஓரறிக்கை

வாய்பிளந்த வடிவேலர்
ஆர்செத்த தெனவினவ
நாயென்று வெள்ளிமயில்
நகைப்புடனே கள்ளடித்தார்.

''நாய்க்குப்போய் விஷம்பரவ
நல்லதம்பி குஞ்சனில
வாய்ச்சிருந்த தென்ன''வென்று
வடிவேல ஞர்கிளற......

''மாட் டிக்கொண் டானிப்ப
மறியலுக்க குஞ்சனடா
காட்டிக் குடுக்கிறவன்
காத்திலயும் நஞ்சிருக்கும்

நாய்க்கூண்டு வண்டிலுக்கை
நிக்கவச்சா ஊர்காலி
நாயளெல்லாம் சாகுமிது
'நல்ல பிளான்'' என்று சொல்லி...

ஓழுங்கையிலே ஏறிவந்த
வெள்ளிமயில் காலையொரு
வலங்கைச் சுழிவால் நாய்
வாய்கௌவி யோடியது.

கள்ளடித்தோ ரெல்லோரும்
கத்துகின்ற மயிலாரைத்
தள்ளிவிட்டு நாயைத்
தொடர்ந்தோடிப் பின்திரும்பி...

''நாய்சாக யில்லையினி
நிம்மதிதா னெங்களுக்கும்
போய்மருந்து கட்டு'' என்றார்,
போகின்றார் வெள்ளிமயில்.

– நிம்மதி

# சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தில் சிங்களப் பிரதேசமாகும் அம்பாறை மாவட்டத்தின் வரலாறு

தமிழர்களின் தாயகப் பிரதேசம் படிப்படியாகச் சூறையாடப்பட்டு மட்டக்களப்புமாவட்டத்தின்தெற்கு, தென்மேற்குப் பகுதிகளை உள்ளடக்கியதாக 1955ம் ஆண்டு அம்பாறை மாவட்டம் உருவாகியது.

1955ம் ஆண்டுக்கு முன்னர் அம்பாறை என்ற மாவட்டம் உருவாக்கப்படவில்லை. அதுவரை மட்டக்களப்பு மாவட்டமானது வடக்கே வெருகல் ஆற்றினையும், தெற்கே குமண ஆற்றினையும்(கும்புக்கன்ஓயா) எல்லையாகக்கொண்டு காணப்பட்டது.

ஆனல் இன்று அம்பாறை மாவட்டத்தினை 'திகாமடுல்ல' என்ற சிங்கள நாமத்துடன் தேர்தல் மாவட்டமாகமாற்றி அமைத்துள்ளனர். திகாமடுல்ல பிரதேசத்தில் உள்ள 'தீகவாவி' என்ற புத்த கோயிலை பழைய சமயக்கதை ஒன்றுடன் தொடர்புபடுத்தி அதனைப் புனித நகராக்கியதுடன் 1963ம் ஆண்டுக்குப் பின்னர் தமிழர்களுக்கு சொந்தமான பெருமளவு நிலம் அரசாங்கத்தினல் சுவீகரிக்கப்பட்டது.

கல்லோயா த்திட்டத்தின் ஒரு நேரடிவிளைவாக அம்பாறை மாவட்டத்தில் சிங்களவரின் தொகை திடீரென அதிகரித்திருக்கும் ஒரு நிலைமையினை அவதானிக்கலாம் இத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அம்பாறையில் உள்ள மொத்தச் சிங்களவரின் தொகை 3000 ஆகும். ஆனல் குடியேற்றங்களின் விளைவாக பெருமளவு சிங்களவர் தென் இலங்கையிலிருந்தும் ஏனைய சிங்களப் பிரதேசங்களிலிருந்தும் கொண்டு வந்து குடியேற்றப்பட்டமையால் இன்று சிங்களவரின் தொகை 1 லட்சத்து46 ஆயிரத்து371 ஆகும்.

1981ம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீடுகளின்படி மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் முஸ்லீம்கள் 41·5 வீதமாகவும், சிங்களவர்கள் 37·6 வீதமாகவும், தமிழர்கள் 19·9 வீதமாகவும் காணப்படுகின்றனர். குடியேற்றத்துக்கு முன்னர் 2ம் நிலையில் காணப்பட்ட தமிழர்கள் 3ம் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் அரசியல் பிரதிநிதித்துவம் படிப்படியாக வீழ்ச்சி அடைந்து 1994ம் ஆண்டு இடம் பெற்ற பொதுத்தேர்தலுடன் ஒரு அரசியல் பிரதிநிதித்துவத்தையாவது பெற்றுக் கொள்ள முடியாமல் போனமையாகும். இந்த நிலையானது அம்பாறை மாவட்டத்தில் வாழும் அனைத்து தமிழர்களையும் அரசியல் ரீதியாகவும் அபாயமான ஒரு நிலைக்கு இட்டுச்சென்றுள்ளதுடன், தமிழர்களின் அரசியல் ரீதியான இருப்பை சூனியமாக்கியுள்ளது.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எல்லைப் புறத்தில் உள்ள 33ம், 37ம், 38ம், 39ம் 40ம் கிராமங்களுடன் காக்காச்சிவட்டை, பாலையடி, வட்டைவக்கி எல்லை வெல்லாவெளி போன்ற கிராமங்களும் இராணுவ நிர்வாகத்திற்காக இன்று அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கிராமங்கள் காலப்போக்கில் நிர்வாக ரீதியாக அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்படும் அபாயமும் உள்ளது,

எனவே இந்த அபாயகரமான சூழ்நிலையினை தமிழர்களின் அரசியல் தலைவர்கள் என தங்களைத் தாங்களே கூறிக்கொண்டு தலைநகரில் வாழ்க்கை நடாத்துபவர்கள் தீர்க்கதரிசனமான அரசியல் அணுகுமுறைகளினூடாக தடுத்துநிறுத்த முன்வரவேண்டும்.

நன்றி: சரிநிகர்

# ஈழக் கடற்பரப்பில் ஆழக்காலூன்றிய

# சோழர் வழியில்.. வேங்கைக் கடல் வீரர்

'மஜும்தார்', - புசல்கா ஆகிய இருவரும், நாகர்—இயக்கர் ஆகியோர் வேடர்களின் சந்ததியாக இருக்கலாமென்று கூறியுள்ளனர். 'ஷெலிக்மன்' என்பவரும் இதே கருத்தையே கூறியுள்ளார். தம்பிமுத்து - இராசநர்யகம் - ரெனன்ற் - பார்கள் - நந்ததேவ விஜேசேகரா என்பவர்கள்மகாவம்சம்குறிப்பிடும் நாகரை மனித வர்க்கத்தினராகவே கொள்ளுகின்றனர். [கோணேஸ்வரம்—பக்கம் - 45]

எது எப்படியிருந்தபோதிலும் ஈழநாட்டின் வரலாற்றில் நாகர்—இயக்கர் என்போர் அழியாத இடத்தைப் பிடித்திருந்ததை யாவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்த நாகர்களை வரலாற்ருசிரியர்களிற் சிலர் கற்பனைக்கு அப்பாற்பட்டவர்களாகச் சிந்திப்பதிலிருந்து, இவர்களுக்கு அசாத்தியத் திறமைகளும் நிறைந்திருக்கத்தான் வேண்டும் என்ற கருத்தையும் ஒதுக்கிவிட முடியாது......

## சிவன் என்ற நாமம்

தேவநம்பியதீசனின் காலத்தில் வகை. தொகையின்றி மக்கள் பௌத்தத்தை பின்பற்றத்தொடங்கியது ஏன்? என்ற கேள்விக்கு பதில் மிகவும் இலகுவானதே. தேவநம்பியதீசனின் காலத்திற்கு முதல் ஈழத்தில் இந்துசமயம் இருந்திருக்கிறது என்ற உண்மையை பல வரலாற்று நூல்களின் மூலம் அறிய முடிகிறது. அத்துடன் இக்காலங்களில் வழங்கி வந்த மூத்த சிவா, சிவா, போன்ற பெயர்களும் இதனை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

பண்டுபாசவின் 10 பிள்ளைகளில் ஒருவன் சிவா என்பவன்; தேவநம்பியதீசனின் தந்தை பெயர் மூத்த சிவா, பண்டுகாபயவின் மாமன்களில் ஒருவன் திரிகண்ட சிவா, அசேலனின் எட்டுச் சகோதரர்களில் ஒருவன் மஹாசிவன், இவற்றைவிட கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்ரும் நூற்ருண்டிலிருந்து கிடைக்கின்ற சாசனங்கள் பலவற்றிலும் 'சிவாவுடன்' தொடர்புபட்ட பெயர்கள் பல வருவதைக் காணலாம். [கோணேஸ்வரம் - பக்கம்-27[

தேவநம்பியதீசனின் காலத்திற்கு முன் ஈழத்தில் இருந்து வந்த இந்துசமயம், சரியான நெறிப்படுத்தலின்கீழ் இருந்திருக்க முடியாது. [நாகர்-இயக்கர் ஆகியோர்] மரவழிபாடு, லிங்க வழிபாடு, மற்றும் ஜைனம்-பிராம்மணியம் ஆகிய மதக் கருத்துக்களும் நிறைந்து காணப்பட்டன. [ஆதாரம்-கோணேஸ்வரம்பக்கம்-15] ஆனுல் தேசிய ரீதியாக குறிப்பிடக்கூடிய அளவு சிறப்புடன் எந்த மதமும் இருக்கவில்லை என்பதே பௌத்தம் கிடு கிடுவென்று வளரத் தொடங்கியதற்கான முக்கிய காரணமாகும்.

'ஹுஆன் திஸாங் [Huan-Tizang[ என்பவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில்;......

''முன்பு சிங்கள இராச்சியத்தில் ஒழுக்ககேடான சமய வழிபாடே காணப்பட்டது என்றும், புத்தர் இறந்து முதல் நூறு வருடங்களின் பின் அசோகராஜனின் இளைய சகோதரனை 'மஹேந்திரா' எனப் பெயர் கொண்டவர் இலங்கைக்கு வந்து உண்மையான தர்மத்தின் அறிவைப் பரப்பினர்'' என்று கூறியுள்ளார். [ஆதாரம்: கோணேஸ்வரம் பக்கம்-16]

ஹுஆன் திஸாங், ஏழாம் நூற்ருண்டைச் சேர்ந்தவராகையால் பாளி நூல்களான தீபவம்சம், மகாவம்சம் ஆகியவற்றின் சார்போடு இவர் கருத்து அமைந்திருக்க வாய்ப்புண்டு.

வடபகுதியில் இருந்த நாக தீபத்தின் அரசர்களான நாகர்கள்-நாக அரசிகள்-நாகர் இளைஞர்-யுவதிகள். மகிந்தனால் கொண்டுவரப்பட்ட வெள்ளரசுக் கிளைக்கு மரியாதைசெய்து ஏற்றுக்கொண்டதாக தீபவம்சமும். மகாவம்சமும் கூறுகின்றன. [தீபவம் : பக்கம்-194]

நாக அரசர்கள் கணிசமான அளவு பௌத்த மதத்தை தழுவியிருக்கவேண்டும் என்பதற்கு இன்னும் பல ஆதாரங்கள்உள்ளன. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பதுபோல் வடபகுதியில் மக்கள் அக்காலகட்டத்தில் பௌத்தத்தைத் தழுவியிருக்கலாம்...... கந்தரோடைச்சான்றுகள் தேவநம்பியதீசன்

[7-ம் பக்கம் பார்க்க]

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

# இளம்மனைவியினுல் அரசைத் துறந்த

# ஆந்திர முதல்வர் என். டி. ராமராவ்

தெலுங்கு தேச கட்சியின் தலைவரும், ஆந்திரா முதல்வரும், பிரபல நடிகருமான என்.டி. ராமராவ் முதல்வர் பதவியில் இருந்து விலகியுள்ளார். குடும்பப்பிரச்னையே அவரது பதவி துறப்பதற்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு 73வயதுள்ள அவர் 37 வயதான சிவபார்வதியை இரண்டாவது மனைவியாக ஏற்றுக்கொண்டார். சிவபார்வதிக்கு ஏற்கனவே 18 வயது கொண்ட மகனும் இருக்கிருர். சிவபார்வதி படித்துக்கொண்டிருந்தபோது ராமராவோடு பழகும் வாய்ப்பு ஏற்பட்டது ராமராவ் சுகவீனம் அடைந்திருக்கும் காலங்களில் அவருக்கு உணவு கொடுப்பது 'மருந்துகள் கொடுப்பது' பத்திரிகைகள் படித்துக்காட்டுவது போன்ற சூடும்பப் பெண்போல பணிவிடைகளைச் செய்து கொண்டிருந்தார். இந்தப் பணிவிடைகள் ஈற்றில் ராமராவ் - சிவபார்வதி திருமணத்தில் முடிந்தது,

இதன் பின்பு தான் ராமராவின் அரசியல் வாழ்க்கையில் சோதனைகள் ஆரம்பமாகத் தொடங்கியது ராமராவின் முதற்தாரப் பிள்ளைகளுக்கும். ராமராவின் இரண்டாவது மனைவி சிவபார்வதிக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை ராமராவின் ஆட்சிக்கே உலைவைத்துவிட்டது.

சித்தி சிவபார்வதி வீட்டோடு நிற்காமல் அரசியலில் எதற்காக நுழையவேண்டுமென்று ராமராவின் முதற்தாரப்பிள்ளைகள் போர்க்கொடி தூக்கினுர்கள் இதனுல் ராமராவின் முதற் தாரப் பிள்ளையின் கணவர் மருமகன் சந்திரபாபுநாயுடு மாமனுக்கெதிராக இயங்கத் தொடங்கினுர், தெலுங்குதேசக் கடசிகள் இதனுல் குழப்பநிலை. பல தெலுங்குதேச உறுப்பினர்கள் சந்திரபாபுநாயுடுவின் பக்கம் சாய்ந்து கொண்டார்கள். ஈற்றில் ராமராவ் ராஜினுமா செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

சந்திரபாபுநாயுடு இன்று ஆந்திர மாநிலத்தின் முதல்வராகியுள்ளார். 'என் மகளைத் தான் கொடுத்தேன் சந்திர பாபு நாயுடுவுக்கு கட்சியை தாரைவார்தது்க் கொடுக்கவில்லை' என்ற ராமராவ் கூறிய கருத்துக்கு முரணுக, அரசியலில்இருந்துராமராவைஒதுக்கி கட்சியின் தலைமைப் பொறுப்பையே தனதாக்கிக்கொண்டார் சந்திரபாபுநாயுடு, -ம

## நூல் அரங்கு

# "கச்சதீவு அன்றும் இன்றும்"

அண்மையில் புவியியற் துறை விரிவுரையாளர் ஏ. சூசை ஆனந்தன் எழுதிய 'கச்சதீவு அன்றும்-இன்றும்' என்ற நூல் நடமாடும் துவிச்சக்கரவண்டி மீன் வணிகர் மன்றத்தினரால் வெளியிடப்பட்டது.

இதில் குறிப்பிடப்படவேண்டிய விடயம் என்னவென்ருல் முன்பு கல்விமான்களாலும் புத்திஜீவிகள் என்று குறிப்பிடப்படும் சிலராலுமே நூல்வெளியீடுகள் இடம்பெறுவது வழக்கம். ஆனுல் சாதாரண அடிநிலை மக்கள்கூட எம்பிரதேசத்தில் விழிப்படைந்துவிட்டார்கள் என்பது நடமாடும் துவிச்சக்கரவண்டி மீன் வணிகர் மன்றத்தினரால் இந்நூல் வெளியிடப்பட்டதிலிருந்து தெரிய வருகின்றது. இது மகிழ்ச்சிக்குரிய விடயமே.

நீறுபூத்த நெருப்பாக அமுங்கிப் போய் இருந்த கச்சதீவுப் பிரச்னை தற்போது மீண்டும் சூடுபிடித்துள்ளது. தமிழக ஈழப்பத்திரிகைகளிலெல்லாம் கச்சதீவு அண்மையில் முன்பக்கச்செய்தியாக இடம் பிடித்துக்கொண்டது. யாவரும் தெரிந்ததே.

காலத்தின் தேவையை அறிந்து சேவை செய்வது தான் மகத்தான விடயம்' இந்த வகையில் இக்காலப் பகுதியில் 'கச்சதீவு அன்றும் இன்றும், என்றநூலை விரிவுரையாளர் சூசை ஆனந்தன் வெளியிட்டமை பாராட்டுதற்குரிய விடயமே.

கச்சதீவின் அமைவிடம், அதன் புவியியற்பின்னணி, சமுத்திரச்சூழல், மீன்பிடிப் பொருளாதாரத்தில் இப்பகுதி கொண்டுள்ள முக்கியத்துவம் இத்தீவின் வரலாற்றுப் பின்னணி போன்ற சகல அம்சங்களை தேவையான தகவல்களோடு இந்நூல்ஆராய்ந்துள்ளது.

கச்சதீவின் அமைவிடம் வரைபடம் மூலம் காட்டப்பட்டிருப்பது விளக்கமாகவுள்ளது. கச்சதீவுக் கடற்பகுதியின் பொருளாதார முக்கியத்துவத்தைக் கூறும் ஆசிரியர் ஶ்ரீன் இருல், கடலட்டை. சங்கு. முத்து போன்றவளங்கள் அதிகமாக கிடைக்கும் இக்கச்சதீவுக் கடற்பரப்பை வடபகுதி மீனவர்களும் சரி தமிழக மீனவர்களும் சரி இழக்கவிரும்பாத நிலைப்பாட்டை தெளிவாக விளக்கியுள்ளார்.

இக்கச்சதீவுப் பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சியில் இலங்கை அரசும் இந்திய அரசும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் பற்றிக் கூறுகையில்: 1974ம் ஆண்டு ஒப்பந்தம் முக்கியமானது ஏனெனில் கச்சதீவு இலங்கைக்கு உரியதாக்கப்பட்டது. என்று கூறும் ஆசிரியர் அதன்மறுபக்கத்தையும் கூறத்தவறவில்லை. இவ்ஒப்பந்தத்தினுல் இந்தியாவில் கடும் எதிர்ப்புகளும் காரசாரமான விமர்சனங்களும் எழுந்தன.

கச்சதீவில் வலை உலர்த்தவும் தேவாலயவழிபாடு செய்யவும் தமிழக மீனவர்களுக்கு உரிமையுள்ளது எனக் கூறிய இவ்ஒப்பந்தம் மீண்டும் இந்தியாவின் தலையீட்டை திரைமறைவில் காட்டிற்று.

இதனுல் மீண்டும் சர்ச்சை மீண்டும் எல்லைகளை நிர்ணயித்து 1976ல்ஒப்பந்தம். 1983 இனக்கலவரத்தின் போதும் அதன்பின்னரும், ஏன் இன்று வரையும் வடபகுதி, தமிழக மீனவர்களுக்கும் பயணம் செய்த மக்களுக்கும் சிங்கள இராணுவத்தினர் இழைத்த கொடுமை என்பவற்றை வரலாற்று ஆவணமாக்குகிருர் ஆசிரியர். இவ்விடத்தில் வடபகுதி மீனவர்களானுலும் சரி. தமிழக மீனவர்களானுலும் சரி கொல்லபடுவது, தாக்கப்படுவது தமிழர்களே என்ற ஆசிரியரின் பார்வை நோக்கற்பாலது.

இது இவ்வாறிருக்க தமிழக மீனவர்கள் வேண்டுமென்றே அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைவதையும் செல்வங்களை அள்ளிச்செல்வதையும் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆசிரியர் முடிவாக கச்சதீவு சட்டரீதியாக இலங்கைக்குரியது இதை இழந்தால் ஆயிரக் கணக்கான வடபகுதி மீனவர்கள் பாதிப்படைவர் எனத் தனது கருத்தை கூறியுள்ளார்.

புள்ளிவிபரரீதியில் விளக்கப்பட்டிருக்கும் இந்நூலை புவியியல்கற்கும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும்ஏன் சாதாரண மக்களுக்கும் கூட பயன்படக்கூடியதாக இந்நூல் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தொடர்ந்தும்இதுபோன்ற நூல்கள் இத்தகைய காலகட்டத்தில் நடைமுறைவிடயங்களோடு வரவேண்டுமென்பதே பலரதும் ஆவலாகும்.

— விசாலி




# பெண்களின் உரிமைகளை

# மதிக்கும் பீஜிங் மாநாடு

அனைத்து சர்வதேச மகளிர் மாநாடு சீனுவின் தலைநகரான பீஜ்ஜிங்கில் கடந்த 4-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு விட்டதில் அனைத்துப் பெண்கள் தரப்பிலும் ஒரு திருப்தி, ஏன் பெருமிதம் என்று கூடச் சொல்லலாம். 170 நாடுகளை சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

சர்வதேச ரீதியில் 4-வது முறையாக நடைபெறும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் முகமாக ஈழத்திலிருந்து திருமதி சரோஜா சிவச்சந்திரன், திருமதி கோகிலா மகேந்திரன் உட்பட பலர் சீனு பயணமாகியுள்ளனர்.

இம்மாநாட்டில் அமெரிக்க முதல் பெண்மணி திருமதி ஹில்லாறி கிளின்டன் மற்றும் பாகிஸ்தரன் பிரதமர் பெனுஸிர் பூட்டோ ஆகியோர் கலந்து சிறப்பிப்பதும் இம்மாநாட்டின் சிறப்பை சர்வதேச அரங்கிற்கு உயர்த்துவதாக அமைகிறது.

குறிப்பாக பெண்களைப் பொறுத்தவரையில் ஆணுதிக்கக் கொடுமையிலிருந்து விடுபடல், கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார சமத்துவம், ஆணுக்குப் பெண் சமன் என்ற வகையில் நாட்டை ஆளவும், பெண்களால் முடியும் என்பதனை உலக அரங்கில் நிரூபிக்கும் வகையில் இம்மாநாடு அமையும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

உடல், உளரீதியாக பெண்கள் பாதிக்கப்படும் அளவிற்கு நிகழ்த்தப்படும் கொடுமைகள், பாலியல் ரீதியாக பெண் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் அவலங்கள் போன்ற பல முக்கிய விடயங்கள் இம் மாநாட்டில் மேலும் ஆராயப்படவுள்ளன.

நீர்வை நிலோஜா

[7ம் பக்கம் பார்க்க]

## ஈழக் கடற்பரப்பில்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தவையா? அல்லது அதற்கு முன் வந்த புத்தர் காலத்தவையா? என்பதே இன்றுள்ள பிரதான கேள்வியாகும். ஆனால் இவர்கள் பௌத்த தமிழர்களே என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. [தொடரும்]

## இனி ஒரு விதி

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் பெருமூச்சுப் பிறந்தது.

''உதாலையே நீ மூண்டு நாளா வீட்டை வராமை விட்டனி......''

சந்திரன் மௌனமாய் தலையைக் குனிந்துகொண்டான்.

''டேய் விசர்ப்பொடியா... நான் எத்தனை தரமடா வழிக்குவழி சொல்லுறனான். கேக்கிறனியே......... ........ குழை தாட்டு, குப்பை கஞ்சல் போட்டு, எருப் பரவி தறையை ஆறவிட்டு இணக்கிச் செய்யுங்கோ எண்டால் கேப்பியளே......... போன போகத்தில் கிழங்கு வெட்டிப் போட்டுத் தறையை ஆறவிட்டனியே......''

சந்திரனால் பதிலேதும் கூற முடியவில்லை. ஆனால் அவனது அடிமனஉணர்வுகளில் குற்றவுணர்வொன்று தலை காட்டத் தொடங்கியது.

''தம்பி கவலைப்படாதை தறை ஒருக்காவிளையும்...... ஒருக்கா ஏக்கும்...... இதுக்குப் போய் மருந்து குடிக்கிறன். அது இதெண்டு விசராடாதை. இண்டையில் நிலைமையிலை ஒருக்கா உரம் விடுவான். பிறகு மறிப்பான் இது எதிர்பார்த்தது தானே ராசா...அதாலை இந்த மண்ணையேநிரந்தரமா நம்பியிருக்கிற நாங்கள்தான் காலத்துக்கு தகுந்தமாதிரி நடக்கவேணும்......''

''அப்பு...நீ என்னைக் குழப்பிறாய்......''

''நீ தான் ராசா குழம்பிப் போய்க் கிடக்கிறாய்......இன்டையிலை இருந்து உன்ரை குழப்பம் தீருமட்டும் நானும் உன்னோடை தறையிலை இறங்கிறன். உரத்தையும் எண்ணையையும் நம்பியிராமல்...எப்ப லொறியள் வரும் எண்டு காத்திராமல்...எங்கட எருவையும் குழையையும், துலாவையும் பாவிச்சு தோட்டம் செய்வோம் எழும்பு...எழும்பி நம்பிக்கையோடை தொடர்...''சந்திரனின் பதிலுக்குக் காத்திராமல் முறிந்து முடமாகிக் கிடக்கும் ஆடுகாலை நோக்கி நம்பிக்கையோடு நடக்கிறார்.

[யாவும் கற்பனை]

## கருத்திற் காலவதி

4ம் பக்க தொடர்ச்சி)

கட்டுரை 1980 களில் ஆங்கிலத்தில் வெளிவந்தது. கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரின் தொன்மையான நிரந்தரக் குடியிருப்புகளைப் பற்றி போதிய ஆதாரங்களுடன் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இவை ஒன்றும் கே. எம். டி. சில்வாவிற்குத் தெரியாதோ? 1970 களின் பிற்பகுதியைத் தொடர்ந்து இலங்கையின் பண்டைய வரலாறு பற்றிய பார்வையும், கருத்துக்களும் பெரிதும் மாறியுள்ளமை கே. எம். டி. சில்வாவிற்கு தெரியாமற் போனமை அதிசயம் தான்.

கிழக்கு மாகாணம் கண்டி இராச்சியத்தின் கீழ் இருந்தமைக்காக அது தமிழரின் தாயகமல்ல என்று கே. எம். டி சில்வா கூறுவாரானால் கண்டி, கோட்டே இராச்சியங்கள் ஆங்கிலேயருக்குக் கீழ் இருந்தமைக்காக அவை சிங்களவரின் தாயகமன்றி ஆங்கிலேயரின் தாயகமோ?

கே. எம். டி. சில்வாவின் கருத்தினை விவாதத்திற்காக எடுத்துக்கொள்வோம். கி.பி. 13-ம் நூற்றாண்டிற்கு முன் திருகோணமலையில் சிங்களவர் வாழ்ந்தார்கள் என்பதற்காகவோ, 13-ம் நூற்றாண்டிற்தான் தமிழர் தென்னிந்தியாவிலிருந்து வந்து இங்கு குடியேறினார்கள் என்பதற்காகவோ தமிழரின் தாயகக் கோட்பாடு நிராகரிக்கப்பட முடியாதது.

நவீன தேசிய அரசுகளின் தோற்றத்திற்கு முன் இலங்கைத்தீவும், தென்னிந்தியாவும் ஒரே கலாச்சார வலயமாகவே இருந்தது. இந்தப் பொதுவலயமாகிய பிரதேசத்தில் பல அரசுகள் இருந்தன. இந்த பொதுவலயப் பிரதேசத்தில் மக்கள் அங்கிங்காய் புலம் பெயர்வதும், குடியேறுவதும் வழக்கம். ஆனால் தேசிய உருவாக்கத்தின் பின்புதான் அதற்குரிய தாயகமும், அதற்குரிய எல்லை நிர்ணயங்களும், அதற்குரிய சட்ட சம்பிரதாய வரம்புகளும் உருவாகின.

ஒரு பொதுக் கலாச்சார வலயமாக இருந்த பண்டைக் கால குடியிருப்புகளுக்கு உரிய வரலாற்றை வைத்துக் கொண்டு நவீன தேசிய அரசுக் குடியிருப்புகளுடன் குழம்புவது தவறு.

13-ம் நூற்றாண்டைத் தொடர்ந்துதான் தமிழர் இலங்கைக்கு வந்து குடியேறினர். எனவே அவர்கள் குடியேறிய இடம் அவர்களுக்குத் தாயகமல்ல என்று கூறும் கே. எம். டி. சில்வாக்கள் வரலாற்றின் ஒரு முக்கிய பக்கத்தைத் திரும்பிப் பார்க்கட்டும். அதாவது ஐக்கிய அமெரிக்காவிலும், கனடாவிலும், ஒஸ்ரேலியாவிலும், நியூஸிலாந்திலும் 16-ம் நூற்றாண்டிற்குப் பின் குடியேறிய வெள்ளையர் அங்கெல்லாம் தேசிய இனங்களாய் உருப்பெற்று, அரசமைத்து. வல்லரசாய்க் கூட வாழ்கிறார்கள். அப்படியென்றால் கே. எம். டி. சில்வா கூறுவது போல் 13ம் நூற்றாண்டின் பின் குடியேறிய தமிழர் ஏன் ஒரு தேசிய இனமாயும், அதற்கென உரிய தாயகத்தையும் கொண்டிருக்க முடியாது? வரலாற்றைப் பாராயணமாய் சப்பித் துப்பும் கே. எம். டி. சில்வாக்களுக்கு இது ஒருபோதும் விளங்க முடியாத விடயம் தான்.

கே. எம். டி. சில்வா காலாவதியான கருத்துக்களை வைத்துக் கொண்டும், காலாவதியான எண்ணங்களை வைத்துக் கொண்டும் பிழையாக வரலாற்றை எழுதி பிழையான வழியில் மக்களை தூண்டுகிறார். கே. எம். டி. கில்வா முதுபெரும் வரலாற்று அறிஞர் என்றால் இந்த அறிவியலினதும், வரலாற்றினதும் கதியென்ன? மூதாதையர்களுக்கே தாயகம் இருக்கமுடியும் என்றால் குரங்குக்குத்தான் தீவு சொந்தம்.

## பிரான்சின்

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

டங்களில் அணுஆயுத தாக்குலை செய்து வரும் சக்தி கொண்டவை யாகயுள்ளன. இவை பிரான்ஸ், அமெரிக்கா சீனா. பிரிட்டனிடமும் இப்போதுள்ளன!

இவற்றைவிட பன்முக இலக்கை நோக்கி தாக்கும் அமெரிக்க எம். எஸ். ஏவுகணை, சோவியத் யூனியனின் எஸ். எஸ். 18 ஏவுகணை பத்துநகரங்களை ஒருநொடிப் பொழுதில் சாம்பல்மேடாக்கும் தன்மைகொண்டவை யாகவுள்ளது.

## பெண்களின்

6-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களை கண்டபடி கைது செய்தல், சிறைக்கூடங்களில் எதுவித விசாரணையுமின்றித் தடுத்து வைத்தல் போன்ற மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு ஏதிரான விடயங்களும் இம்மாநாட்டில் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிய வருகின்றது.

முடிவாக சீனாவில் நடைபெற்றுவரும் மகளிர் மாநாடொன்று பெண்களின் அந்தஸ்தை, பெண்களின் அபிலாசைகளை, ஜனநாயக உரிமைகளை கட்டியெழுப்புவதில் ஓர் உந்து சக்தியாக அமைய முடியும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

## இவ்வாரம் எப்படி?

10–09–95 முதல்
16-09–95 வரை

**மேடம்:**
குடும்பத்தில் ஏமாற்றம் நிலவும். தொழில் சுமாராக இருக்கும். பெண்களின் ஒத்துழைப்பால் பணவசதி பலப்படும். கருமங்களை நிறைவு செய்ய தந்திர யுக்திகளைப் பயன்படுத்தவேண்டி வரும். நண்பர்கள் உதவி புரிவர், மத்திம பலன் தரும் வாரம்.

**இடபம்:**
குடும்பத்தில் அமைதியிருக்கும், தந்தைவழி நன்மைகள் கிட்டும், தொழிலில் பணப் பற்றாக்குறை நிலவும். சுய முயற்சிகள் மூலம் எதிர்பார்ப்பவைகளை நிறைவு செய்யலாம், சமரச முயற்சிகள் கைகூடும், கல்வியில் பாராட்டுக் கிட்டும், சொத்துத் தகராறுகள் கவலை தரும், பயணங்கள் தடைபடும், அதிர்ஷ்டமற்ற வாரம்.

**மிதுனம்:**
தொழிலில் அதிக லாபம் கிட்டும், பங்காளிகள் பெருந்தன்மையாக நடப்பர், குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுபகாரியங்களும் கைகூடும், பொதுச் சேவையில் தலைமைப் பதவி கிட்டும். உடன் பிறந்தாரின் உதவியுண்டு, மகிழ்ச்சியான வாரம்.

**கடகம்:**
நல்ல வாய்ப்புகளை நழுவவிட வாய்ப்புண்டு. பொருளாதார நிலை பாதிக்கும். பெண்களால் துன்பம் உருவாகும், குடும்பத்தில் வேற்றுமையுண்டு. மறைமுக எதிர்ப்புகள் இருக்கும், சுபகாரிய முயற்சிகள் தாமதமாகும், மனச்சங்கடமான வாரம்.

**சிங்கம்:**
குடும்பத்தில் குழப்பநிலை தோன்றும், தேவையற்ற பகைமை நிலவும், பொருளாதாரம் பாதிக்கும், தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் இருக்காது, பழைய பிரச்னையொன்று வீண் பயத்தைத் தோற்றுவிக்கும், கடன் சுமையுண்டு, நற்பலன் குறைந்த வாரம்.

**கன்னி:**
குடும்ப உறவில் குதூகலம் இருப்பினும் நம்பிக்கையீனம் தோன்றும். ஆரோக்கிய நிலை பாதிப்படையும், தொழிலில் சுமூகநிலை இருப்பினும் லாபம் குறைவாக இருக்கும், பணப் புழக்கம் மந்தமடையும், சுபகாரியச் செலவுண்டு, யோசனை மிக்க வாரம்.

**துலாம்:**
குடும்பத்தில் அன்னியோன்யமும் கற்பனையும் அதிகமாக இருக்கும், பெற்றோர் ஆதரவுண்டு, தொழில் சுபீட்சமுண்டு. பணநிலை மகிழ்ச்சி தரும், பிறர் நலனில் அதிக அக்கறையுடன் செயல்படுவீர்கள், புதிய முதலீடுகள் லாபம் தரும், காரிய சித்தி கலகலப்பான வாரம்.

**விருச்சிகம்:**
குடும்பத்தில் இனம்புரியாத கவலை உருவாகும். சொந்தநலனில் அதிக அக்கறை காட்ட வேண்டியிருக்கும். தொழிலில் நஷ்டம் உண்டு. பணப்பற்றாக்குறையால் புதியகடன்கள் ஏற்படும். அநாவசிய செலவினமுண்டு, அசுபவாரம்.

**தனுசு:**
குடுபத்தில் புத்திரர் துன்பம் அதிகரிக்கும். தொழிலில் மனக்கலக்கமுண்டு. நம்பிக்கையீனம் கவலை தரும். பணக்கஷ்டமுண்டு இருப்பிடமாற்றமுண்டு. மறைமுகமானசெலவுண்டு காரியதாமதமாகும். சஞ்சலமிக்கவாரம்.

**மகரம்:**
குடும்பத்தில்பற்றற்ற நிலை இருக்கும் செய்தொழிலில் மந்தமும் பொருளாதார நெருக்கடியும்தோன்றும் உறவினர் புதிய பிரச்னைகளை உருவாக்குவர். ஆன்மீக சிந்தனை அதிகரிக்கும் கடித உறவு சாதகமான பலனைத்தராது. வாய்ப்பு குறைந்தவாரம்.

**கும்பம்:**
குடும்பகம் திருப்திதரும், தொழில் துறையில் எதிர்ப்புக்களை சமாளித்து முன்னேறலாம், பணநிலை சுமாராக இருக்கும். செல்வாக்கு அதிகரிக்கும், சுபகாரிய செலவுண்டு, எதிர்பார்த்த அனுகூலங்கள் சிறப்பைத்தரும், மனநிம்மதியான வாரம்.

**மீனம்:**
குடும்பத்தில் அமைதியுண்டு சகோதர அனுகூலமுண்டு, தொழில்துறையில் உற்சாகமும் உழைப்பும் இருக்கும், பணநிலை சாதகமாக இருக்கும், பிரச்னைகள் மனச்சுமையைத்தந்தாலும் பாதிப்பு இருக்காது, அன்னியர் உதவியுண்டு. சாதாரணவாரம்.

கணிப்பு: ஜோஸ்யர்,

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ். இருபாலை தமிழ் மாமன்றத்தின் விசேட கூட்டம் ஒன்று இன்று 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மன்றத்தின் தலைமைச் செயலகத்தில் மன்ற அமைப்பாளர் திரு. எஸ்.கே.ஜீவமோகன் தலைமையில் நடைபெறும். 154

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். நீராவியடியிலுள்ள கடையிற் சுவாமிகள் சமாதிச் சிவாலயத்தில் இன்று 10ம் திகதி அன்னதான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைய தினம் விஷேட அபிஷேக நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது.

0 0

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட சனசமூக நலனோம்புநலவள நிலையங்களிற்கான தியாகி திலீபனுடைய 8-ம் ஆண்டு நினைவு நாள் தொடர்பான கலந்துரையாடல் இன்று 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 மணிக்கு தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் காலை 10 மணிக்கு இதே பாடசாலையில் விளையாட்டுக் கழகங்களுக்கான அவசர கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–09–10
ஞாயிறு இரவு

| | |
|---|---|
| 8-02 | இசையரங்கம் - நிகழ்ச்சியில் ஈழ நல்லூர் ந.மகேந்திரன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி |
| 8-30 | செய்திகள் |
| 8-40 | தொடர் நாடகம்- பொன்.கணேசமூர்த்தி எழுதிய ''இலங்கை மண்'' 10ம் அங்கம் |

1995–09–11
திங்கள் காலை

| | |
|---|---|
| 7-02 | மாவீரவணக்கம் |
| 7-15 | நீங்கள் கேட்டவை |
| 7-30 | செய்திகள் |
| 7-35 | பத்திரிகைச் செய்திகள் |
| 7-45 | நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி |

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–09–10
ஞாயிறு மாலை

| | |
|---|---|
| 5-01 | சிந்தனைச்சிதறல் |
| 5-02 | எழிச்சிகீதம் |
| 5-10 | புதியவை |
| 5-15 | மழலைகளுக்காக |
| 5-30 | செய்திகள் |
| 6-00 | சிந்தனைக்குச் சில விடிகள் |
| 6-02 | உங்கள் தெரிவு |
| 6-10 | செய்திகள் |
| 6-15 | உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி |


உ

# திருமண அழைப்பு

''அன்பும் அறமும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'' (குறள்)

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான யுவ வருடம் ஆவணி மாதம்
26-ந் திகதி [ 11 – 09 – 1995 ] திங்கட்கிழமை
காலை 9-15 மணி முதல் 10-55 மணி வரை வரும்
விருச்சிக லக்கின சுபமங்கள வேளையில்

திரு. திருமதி சிதம்பரப்பிள்ளை
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
★ சற்குணராசா ★
அவர்களுக்கும்

திரு. திருமதி முத்தையா
தம்பதிகளின்
புதல்வி
திருநிறை செல்வி
★ சாந்தி ★
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு நல்லூர் இளங்கலைஞர் மன்ற திருமண மண்டபத்தில் மாங்கலியதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

✶ 12 – 09 – 1995 செவ்வாய்க்கிழமை மாலை 4–00 மணிக்கு
மணமகன் இல்லத்தில் விருந்துபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி சிதம்பரப்பிள்ளை
''மலர் பவனம்''
காளிகோவிலடி, சங்கானை.
தற்போதைய விலாசம் :
இல. 520, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி முத்தையா
''திசைமனை''
சுழிபுரம்.
தற்போதைய விலாசம் :
மார்க்கற் லேன், மானிப்பாய்.

(சி-1655)

# ஜரிஸ்மோனு சிப்பந்திகள் குறித்து தொடர்ந்து பேச்சு

(கொழும்பு)

ஜரிஸ் மோனு கப்பலின் எட்டு மாலுமிகளின் விடுதலை தொடர்பாக தொடர்ந்து பேச்சு வார்த்தை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் விடுதலை தொடர்பாக நேற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திற்குமிடையில் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களை விடுவிக்கும் நடவடிக்கையில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும் இது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் நேற்று நடத்திய பேச்சு வார்த்தை விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை எனவும் அரசு தரப்பு செய்திகள் தெரிவித்தன. ரி

# உலக வங்கியை திருப்திப்படுத்தவே அரசு யுத்தம் நடத்துகிறது

[கொழும்பு]

அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் வடக்கு கிழக்கு யுத்தத்தினுல் தமிழ் மக்கள் சொல்லொணுத் துன்பங்களை அனுபவிக்கிருர்கள் இந்தத் துன்ப நிகழ்வுக்கிடையில் அரசாங்கம் எந்தத் தீர்வை முன் வைத்தாலும், தமிழ் மக்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள் என்று கொழும்பில் புதிதாக அமைக்கப்பட்ட அமைப்பொன்றின் பிரதிநிதி சந்திர கீர்த்தி பண்டார பி. பி. சி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்

அவர் மேலும் கூறியதாவது இந்த யுத்தம் தமிழர்களின் பிரதேசத்தை அழிக்கிறது. பல மரணங்கள் மத்தியில் இடம் பெறுகின்றது.

வடக்கில் உணவுத் தட்டுப்பாடு, மருந்தில்லை இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் எந்தத் தீர்வை முன் வைத்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

அரசாங்கம் உலக வங்கியைத் திருப்திப்படுத்தவே இந்த யுத்தத்தை நடத்துகிறது. என்ருர். ம-சி

# மாலுமிகளை விடுவிக்க அரசு புலிகளுடன் பேச மறுப்பு

(கொழும்பு)

ஜரிஸ்மோனு கப்பல் மாலுமிகளை விடுவிப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச அரசு மறுத்துவிட்டதாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

ஜரிஸ் மோனுவின் எட்டு மாலுமிகளையும் விடுவிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் இரு கடற்பெண் புலிப் போராளிகளை விடுவிக்கக் கோரிய நிபந்தனை விதித்துள்ளனர்.

ஆனல் இது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடாத்த அரசு மறுத்துவிட்டது. அரசு தம்முடன் நேரடியாக பேச்சு வார்த்தை நடாத்தவந்தால் தாமும் சமரசத்துக்குத் தயார் என்ற விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை அரசு நிராகரித்துவிட்டதராகவும் வெரித்தாஸ் தெரிவுத்தது. ர-சி-ரி

# 12 பயணிகள் விடுவிப்பு

(கொழும்பு)

ஜரிஸ்மோனு கப்பல் பயணிகள்ல் 12 பேர் விடுவிக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்த 12 பேரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜரிஸ்மோனு பயணிகள் அனைவரும் யாழ். ஜோன் பொஸ்கோ பாடசாலையில் விடுதலைப் புலிகளால் பராமரிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. -ரி

## ஆத்மஜோதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வு இந்துசமயப் பேரவையினுல் இன்று காலை 10 மணிக்கு கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடத்தப்படவுள்ளது.

ஆத்மஜோதியின் மறைவையொட்டி மேற்படி பேரவை அனுதாபச் செய்தியொன்றையும் வெளியிட்டுள்ளது. -ரி

நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த
'வேரும் விழுதுகளும்'
கல்வியியற் கண்காட்சி
இடம்: நுணுவில் கண்ணகை அம்மன் கோவிலடி
நிகழ்வு நேரம்: காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகிறது
உள் அனுமதிக்கப்படும் இறுதி நேரம் மாலை 5-30 மணி
எங்களைத் தேடி... செல்வோமா?
செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்
(ஏ-5259)

## இன்றைய உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

வலி-கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம், விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில், சென் அன்ரனிஸ் எதிர் பாடும்மீன், பாடும் மீன் 'ஏ' எதிர் அரியாலை. இப்போட்டிகள் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும். -வி-ரி

## சட்ட விரோதமாக

(1ம் பக்க தொடர்ச்சி)

காரிகள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினுர்.

ஜனுதிபதி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

''பொலிசார் எந்தக் காரணம் கொண்டும் இனிமேல் அரசியலில் ஈடுபட கூடாது. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதே அவர்களின் கடமை என்று கூறினுர்.

இவ்வைபத்தில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை உரையாற்றுகையில்,

சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் பாதுகாப்பு அதிகாரிகளை உடனடியாக சேவையிலிருந்து நீக்குவது பற்றி அரசாங்கம் தற்போது தீவிரமாக ஆராய்ந்துவருகிறது.

ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் பொறுப்பாக இருக்கும் பொலிஸ் அதிகாரிகள் வாரந்தோறும் அறிக்கையை பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்க வேண்டும்'' என்று கூறினுர்.

மேற்படி மாநாட்டில்நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. -வி-ரி

# ஆரம்ப ஆசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் ஆரம்ப ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

நாலாயிரம் தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதை அடுத்து ஆரம்ப ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன இதுபற்றிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் நிலவும் தமிழ், முஸ்லிம் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் முகமாகவே உடனடியாக இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை கடந்த டிசம்பர் மாதம் நடாத்தப்பட்ட ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களுக்குரிய பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதோடு, பள்ளிகளின் அடிப்படையில் நியமனமும் வழங்கப்பட்டு வருகின்றது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். -ர-ரி

மட்டக்களப்பிலிருந்து

# வெளிநாட்டு பிரதிநிதிகளை வெளியேறக் கோரிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணப் பல்கலைக் கழகத்தில் உள்வாரி, வெளிவாரி மாணவர்களிடையே ஏற்பட்ட உட்பூசல் காரணமாக வெளிவாரி மாணவர்களின் விரிவுரைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி கற்கை நெறி நடாத்தப்படுவதை எதிர்த்து வரும் உள்வாரி மாணவர்கள் வெளிவாரிக் கற்கை நிறுத்தப்படவேண்டுமென கோரி வந்தனர்.

இதையடுத்து இது தொடர்பாக உள்வாரி, வெளிவாரி மாணவர்களிடையே கடந்த சில தினங்களாக பூசல்கள் இடம்பெற்று வந்தன இதையடுத்தே வெளிவாரி மாணவர்களின் விரிவுரைகள் நிறுத்தப்பட்டுள்ளன. -ர-சி-ரி

## மர்மச்சடலங்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பிரதிப் பொலிஸ் மாஅதிபர் கொட்டகெனிய தலைமையில் சுமார் 300 பேரடங்கிய பொலிஸ் அணியினர் விசேட அதிரடிப் படை முகாம்களைச் சுற்றி வளைத்து இருபது விசேட அதிரடிப் படையினரைக் கைது செய்தனர்.

இவர்கள் மீது நடத்தப்பட்ட தீவிர விசாரணைகளின் பின்னர் மேற்படி பதினெரு பொலிஸ் அதிரடிப்படை அதிகாரிகளும் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டத்தை துஷ்பிரயோகம் செய்தமைக்காகவே இவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக வெரித்தாஸ் தெரிவித்தது. -வி-ரி

## தமிழர் ஏற்கும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யுறுத்தப்பட்டது.

இதுபோன்ற பல ஆர்ப்பாட்டங்கள், கண்டனக் கூட்டங்கள் பல நாடுகளிலும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. -ம-ரி

## படையினருக்கு

(1ம் பக்க தொடர்ச்சி)

ரல் எச்.எம் ஹப்பு ஆராய்ச்சி ராணுவ அதிகாரிகள் உட்பட பல ராணுவத்தின் இதில் கலந்து கொண்டார்கள். ரி

யாழ். மிட்-ரவுண் றேற்றறக்ற் கழகம்
நடாத்தும்
★ [illegible] ★
ஆரம்பமாகி நடைபெறுகின்றது.
★ யாழ். இந்துக்கல்லூரியில் இன்று மட்டும்
★ யாழ். மிட்-ரவுண் றேற்றறக்ற் கழக மைதானத்தில் 12-ந் திகதி வரை
நேரம் காலை 9-00 — இரவு 10-00 மணி வரை
★ 150க்கும் மேற்பட்ட கண்கவர் வண்ணக் கோலங்கள் ★ 60க்கு மேற்பட்ட பிறந்த நாள் திருமண வைபவ கேக் ஐசிங் வகைகள்
★ நுட்பமான முறையில் அமைக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் ★ மணப்பெண்ணிற்குரிய கூந்தல் அலங்காரங்கள்
★ சிறுவர்களுக்கு உற்சாகமூட்டும் விளையாட்டுப் பொறிகள் ★ உங்கள் திறமைக்கு சவாலாக அமையும் உள்ளக விளையாட்டுக்கள்
★ பாம்பு, பறவைகள் முதல் யானை, கரடி முதலிய விலங்குகள்
★ இது ஓர் அரிய சந்தர்ப்பம்! காண வாருங்கள்!! ★
[சி-1661] பிரவேசம் ரூபா 10/- மட்டுமே

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில், மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Postoffice Sri Lanka under Licenc Number B / 1633613.